Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

3

# " குறவஞ்சி இலக்கியத்தில் நாட்டியம்"

ஷே. பஹுருதீன்
பச்சையப்பன் கல்லூரி - சென்னை – 30.

**ஆய்வு நோக்கம் :**

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் குறவஞ்சியானது நாடகத் தமிழின் வகையைச் சார்ந்தது. இயல்பாக உள்ள தமிழ்ப் பாடல்களை இசையோடு பாடி அபிநயம் பிடித்தால் முத்தமிழும் இதன் கண் அடங்கும் எனலாம். குறவஞ்சி இலக்கியத்தில் நாட்டியக் கூறுகள் மிகுந்து உள்ளன. அதனை நாட்டிய சாஸ்திரம் வழி நின்று விரிவாகக் காண்போம்.

**ஆய்வு எல்லை :**

குறவஞ்சி இயங்குவதற்கு முக்கியக் காரணமாய் விளங்கும் ஆண் கதாபாத்திரங்களையும் , அவற்றின் நாட்டிய வெளிப்பாட்டையும் பற்றி இக்கட்டுரையின் வழியே ஆய்வு செய்வோம்.

**கடவுச்சொற்கள் :** இலக்கியம்,குறவஞ்சி,கட்டியக்காரன்,தலைவன்,தலைவி,சிங்கன்,சிங்கி, குளுவன்.

**குறவஞ்சி இலக்கியம் ஓர் அறிமுகம் :**

குறவஞ்சி நாடகங்கள்யாவும் கதை அமைப்பில் ஒரே மாதிரியாகவே இருக்கும். பாட்டுடைத் தலைவன் , தலைவி மட்டும் மாறுபடுவர். கட்டியக்காரன் வருகை, தலைவன் பவனி வருவது , தலைவி தலைவனைக் கண்டு காதல் கொள்வது , பசலையுற்ற தலைவி சந்திரனைப் பழித்தல், மன்மதனைப் பழித்தல், கடலினைப் பழித்தல், தென்றலைப் பழித்தல் போன்றவையும், குறத்தி வருதல் குறத்தி தன் மலைவளம் மற்றும் நாட்டு வளம் கூறுதல், தலைவிக்குக் குறி கூறுதல், தலைவி தலைவனோடு சேருவாள் என்று கூறி பின்னர் தலைவன் தலைவியை மணப்பது இவையாவும் எல்லாக் குறவஞ்சி நாடகங்களிலும் அடிப்படையாக வரும்.

இத்தகைய கதை அமைப்பினைக் கொண்ட பல குறவஞ்சி நாடகங்கள் தமிழில் தோன்றி உள்ளன. அவற்றுள் தலைசிறந்தவை,

திருக்குற்றாலக் குறவஞ்சி,
சரபேந்திர பூபால குறவஞ்சி,
அழகர் குறவஞ்சி,
செந்தில் குறவஞ்சி,
கும்பேசர் குறவஞ்சி,
விராலிமலைக் குறவஞ்சி,
தியாகேசர் குறவஞ்சி,

பெத்தலகேம் குறவஞ்சி மற்றும் சில ஈழத்துக் குறவஞ்சிகள் தமிழில் தோன்றியுள்ளன. இவை மேன்மையான இலக்கணச் செறிவும் சிறந்த இசை அமைப்பையும் கொண்டவை.

**குறவஞ்சியும் நாட்டியமும் :**

குறவஞ்சி இலக்கியங்கள் நேர்த்தியான பாடல்கள், விருத்தங்கள் ,சொற்கட்டுக்களையும் இடத்திற்கு ஏற்றவாறு அமையப் பெற்றுள்ளது. இதன் இசை வியக்கத்தக்கது.

இதில் இடம்பெற்றுள்ள பாடல் வரிகளுக்கு அபிநயம் பிடிக்கும் போது பார்ப்போர் மனதையும் தன் வசம் இழுக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆடல், பாடல்,அழகு ஆகிய மூன்றும் பொருந்திய நடனக் கலைஞர்கள் ஆடச் சிறந்தது. ஆகையால் குறவஞ்சி இலக்கியங்கள் நாட்டியத்திற்கு மிகவும் பொருத்தமானவை எனலாம்.

**ஆண் கதாபாத்திரங்கள் :**

குறவஞ்சி இலக்கியத்தில் சில முக்கிய ஆண் கதாபாத்திரங்கள் இடம் பெற்றுள்ளன . அவை,

கட்டியக்காரன், தலைவன் ( இறைவன்) , சிங்கன் ( குறத்தியின் துணைவன்), குளுவன் ( சிங்கனின் நண்பன் ) என்ற ஒவ்வொரு பாத்திரப்படைப்பும் தனக்கென ஒரு சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும். அவற்றைப் பற்றி விரிவாக ஆராய்வோம்.

**கட்டியக்காரன் :**

கட்டியக்காரன் தலைவனின் வருகையைச் சொல்லக்கூடிய கதாபாத்திரமாக எல்லாக் குறவஞ்சி நாடகங்களிலும் இடம்பெற்று இருப்பதைக் காணலாம். பார்ப்பதற்கு நகைச்சுவையுட்டக்கூடிய வகையில் தோன்றினாலும் , உண்மையில் பக்தியில் தலைவனை (இறைவனை) ஆட்கொண்டவன். இந்த கதாபாத்திரம் நகைச்சுவை மற்றும் பக்தி ரசத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அபிநயிக்கப்படுகிறது.

**கட்டியக்காரன் வந்தான் - மழையழகர் கொலுவில் வாசல்**

**( அழகர் குறவஞ்சி)**

இப்பாடல் அழகர் குறவஞ்சியில் கட்டியக்காரன் வருகையை விவரிக்கும் விதமாய் அமைந்துள்ளது.

**தலைவன் :**

தலைவன் ( இறைவன் ) ஒவ்வொரு குறவஞ்சிப் பாடுபொருளுக்கு ஏற்ப மாறுபடுவதைக் காணலாம். தலைவனின் பவனியின் போது இடம்பெறும் பாடல் வரிகள் தலைவனின் நற்குணங்களை எடுத்து இயம்பும் வகையில் அமைந்திருக்கும்.

**பவனி வந்தனரே மழவிடைப் பவனி**

**( திருக்குற்றால குறவஞ்சி )**

**மந்திர தரமா தவ சுந்தரராஜர் பவனி**

**வந்த விந்தை யென்ன சொல்லுவேன்**

**( அழகர் குறவஞ்சி )**

இதில் தலைவன் வருகையும் அதனை நாட்டு மக்கள் வரவேற்கும் விதமாய் நாட்டியத்தில் காட்டப்படுகிறது. இந்த இடத்தில் மல்லாரி இசைக்கப்பட்டு பார்ப்போருக்கு பவனியை உண்மையில் கண் முன்னே கொண்டு வருகிறது. சாதி,மத, இன வேறுபாடுகள் இன்றி எல்லோரும் தலைவனை ( இறைவனை ) நாட்டிற்கு வரவேற்கும் பண்பாடும் அறிய முடிகிறது. இது குழு நாட்டியத்திற்கு மிகவும் ஏற்றதாகவும் உள்ளது.

**சிங்கன் :**

குறவஞ்சி இலக்கியத்தில் மிகவும் முக்கியமான கதாபாத்திரம் சிங்கன். இவன் சிங்கி ( குறத்தி ) மணாளன். தன்னுடைய சிங்கியை எல்லா நகரியிலும் தேடி, வருந்தி இறுதியில் தலைவனுடைய நாட்டில் காண்பதும், அவளிடம் இவ்வளவு நாட்கள் என்னை பிரிந்து எங்கே சென்றாய் என்று கோபம் கொண்டும் , பின் இருவரும் கூடி தலைவனையும் (இறைவனையும்) தலைவியையும் ( இறைவியையும்) ஒன்றாக வழிபடுவார்கள்.

**சோலைமலைச் சிங்கனும் வந்தான் சிங்கியைத் தேடி**

**( அழகர் குறவஞ்சி )**

இப்பாடல் சிங்கன் சிங்கியை தேடும் காட்சியை வெளிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது.

**தேடிச் சென்றானே சிங்கியை**

**நாடிச் சென்றானே சிங்கன்**

**( அழகர் குறவஞ்சி )**

இப்பாடல் வரிகள் சிங்கன் சிங்கியை எங்கெல்லாம் தேடுகிறான் என்றும் அவனின் பிரிவையும் உணர்த்துவதாய் இருக்கிறது.

இதை நாட்டியத்தில் பிரிவையும், ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும் பாவங்கள் காட்டப்படுகிறது. பிரிவைக் காட்டும் வகையில் ஜோடி மான்கள் பிரிந்து இருப்பது , கிளிகள் பிரிந்து இருப்பது போன்றவை சன்சாரியாக அபிநயி க்கப்படுகிறது.

**குளுவன் :**

சிங்கனுடைய நண்பனாக குளுவன் என்னும் கதாபாத்திரம் இடம்பெறுவதை காண முடிகிறது. இவன் தன் நண்பன் உதவி கேட்டுவர உங்கள் இருவருக்கும் இடையில் நடக்கும்

ஊடலில் நான் தலையிட மாட்டேன் என்று மறுக்கும் வகையில் பாத்திரப்படைப்பு அமையப் பெற்றுள்ளது.

**அம்பினைத் தொடுத்து - விலங்கின**
**முன்பினில் விகுத்துக் - கரிகளின்**
**கொம்பினையொடித்துக் - கையிற் கொண்டு**
**குளுவனும் வந்தான்.**

**( அழகர் குறவஞ்சி )**

இது குழுவின் வருகையை விவரிக்கும் வகையில் அமைந்துள்ளது.

**அழைத்துவாடா குளுவா சிங்கையை**

**( அழகர் குறவஞ்சி )**

இப்பாடல் சிங்கியை அழைத்து வரச் சொல்லி சிங்கன் குளுவனிடம் கூறும் வகையில் உள்ளது.

**சர்க்கரை யொருவன் தின்னத் தனிவிர லொருவன் சூப்ப**
**ஒக்குமோ சிங்கா வெற்பி லுனையவள் பிரிந்தா லென்னச்**
**சக்யமா யணைந்தா லென்ன சார்ந்தவர்க் குண்டோ லாபம்**
**அக்கரை யுனக்குண்டானா லழைத்துவா நீயே என்றான்**

**( அழகர் குறவஞ்சி )**

இப்பாடலை நாட்டியத்தில் கையாளும் பொழுது நகைச்சுவை பாவம் அதிக அளவில் வெளிப்படுத்த முடிகிறது. பார்ப்போருக்கும் நகைச்சுவை உணர்வை தூண்டுவதாக அமைகிறது.

**முடிவுரை :**

குறவஞ்சி இலக்கியத்தை இயற்றிய ஆசிரியர்கள் இவ்வுலகை நன்கு உணர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆகையால் தான் குறவஞ்சி இலக்கியங்கள் பல்நோக்குப் பார்வையில் கையாளப்பட்டுள்ளது. தலைவன் நற்குணங்கள் நிறைந்தவனாகவும் தலைவிக்காக இவ்வுலகில் தோன்றி அனைவருக்கும் அருள் செய்பவனாய் விளங்குகிறான். மற்ற ஆண் கதாபாத்திரங்கள் தனக்கென உரிய சுபாவத்தை உடையவர்களாக இடம்பெற்று இருக்கிறார்கள் . இறுதியில் இறைவனையே சரணடைகின்றனர்.

இப்படிப்பட்ட உயரிய கருத்துக்களை எளிய தமிழ் நடையில் யாவரும் அறியும் வண்ணம் நமக்கு ஆண் கதாபாத்திரங்கள் வழியே ஆசிரியர் விளக்குகிறார்.

இன்று இத்தனை அழகு பொருந்திய குறவஞ்சி இலக்கியத்தை நாட்டிய நாடகமாக கையாளும் பொழுது முழுமையாக அரங்கேற்றப்படுவதில்லை. பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தும் ஆண் கதாபாத்திரங்களின் வெளிப்பாடு தற்பொழுது குறைவாக நாட்டியத்தில்

காணப்படுகிறது. இஃது இல்லாமல் குறவஞ்சி இலக்கியத்தியுள்ள ஆண் கதாபாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தால் அவற்றின் சிறப்பும், அழகும்,நயமும் இன்னும் நன்றாய் வெளிப்படும். மக்களுக்கும் சென்றடையும் என்பது என்னுடைய கருத்து.

**துணை நூற்பட்டியல் :**

திருக்குற்றாலக் குறவஞ்சி - திரிகூட ராசப்ப கவிராயர் 1953
அழகர் குறவஞ்சி - கவிகுஞ்சர பாரதி 1963
கும்பேசர் குறவஞ்சி - ஸ்ரீ பாபநாச முதலியார் 1944
நாட்டிய சாஸ்திரம் - பரத முனிவர் 1943
அபிநய தர்ப்பணம் நாட்டிய - நந்திகேஸ்வரர் 1957
நாட்டியக் கலை விளக்கம் - யோகி ஸ்ரீ சுதானந்த பாரதியார் 1944
நாட்டிய நன்னூல் - கங்கை முத்துப்பிள்ளை 1998